# DIOCESAN NEWS LETTER
## VELLORE

Vol. 21 March - 2025 No. 03




**“ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்**
**அவர் அருள் நிறைந்தவர்**
**இரக்கம் மிக்கவர்”**

(யோவேல் 2:13)

Shepherd's Voice



# Lent: A Time to Return, Reflect, and Rejoice

**Dear Brothers and Sisters in Christ,**

“The holy season of Lent is once again upon us—a time when the Church invites us to return to the Lord, reflect on His mercy, and prepare to rejoice in His Resurrection. It is a period of grace and renewal, calling us to examine our hearts and deepen our faith through prayer, fasting, and almsgiving.

**Ash Wednesday: A Call to Repentance**

Our Lenten journey begins with Ash Wednesday, a moment when we receive ashes on our foreheads as a sign of humility and repentance. This ancient tradition reminds us of the fleeting nature of life and the enduring call to conversion. As Scripture tells us: "Return to me with all your heart, with fasting, with weeping, and with mourning" (Joel 2:12). Lent is not just about giving up but about giving more—more time to prayer, more compassion to others, and more space for God in our daily lives. May this season be one of turning back to God with sincerity and trust.

**Saint Joseph : A Model of Strength and Obedience**

In the midst of Lent, we celebrate the Feast of Saint Joseph on March 19. A man of faith, humility, and silent strength, Saint Joseph was entrusted with the care of the Holy Family. Though he spoke no words in Scripture, his actions spoke louder than words—choosing obedience over fear, service over self-interest, and trust over doubt.

Saint Joseph teaches us to follow God's will with confidence, even when the road is uncertain. He is a protector, a guide, and a role model for families, workers, and all who seek God's wisdom. May his life inspire us to serve God faithfully, trusting in His providence.

**The Annunciation: Mary's 'Yes' to God**

On March 25, we celebrate the Annunciation, when the Angel Gabriel appeared to Mary, announcing that she would be the Mother of Jesus. Mary's response, "Let it be done to me according to your word" (Luke 1:38), is an act of total surrender to God's plan. Her 'yes' changed the course of human history. Even though she did not fully understand all that lay ahead, she trusted in God's promise. Like Mary, we too are invited to say 'yes' to God's call in our lives. Whether in our families, workplaces, or communities, we are called to be open to His will and bear Christ's love to the world. "As it is the day of my priestly ordination, kindly whisper a prayer for my life and mission in the diocese of Vellore.

Lent: A Journey Towards Easter Joy "As we walk through Lent, may we embrace this season with hearts open to transformation". Let us:

- Pray deeply, seeking God's presence in our daily lives.

- Fast from sin, making room for God's grace to renew us.
- Give generously, sharing love and kindness with those in need.

May Saint Joseph and the Blessed Virgin Mary accompany us on this path of faith. May their faith, trust and obedience inspire us to walk with Christ in love and humility.

As we prepare to celebrate the joy of Easter, may this Lent be a time of returning to God, reflecting on His love and rejoicing in His mercy.

Wishing you a blessed and grace-filled Lent !

With mercy and hope,

**+ Ambrose Pitchaimuthu**
Bishop of Vellore

## BISHOP'S PROGRAM

| | | |
|---|---|---|
| 01 | Sat | Blessing and Holy Mass, Viruduvilanginan |
| 03-04 | | PMO – Meeting, Bangalore |
| 05 | Wed | Ash Wednesday – Mass, Cathedral Vellore |
| 08-09 | | Meeting, Bombay |
| 11 | Tue | Vicariate Meeting, Vandavasi |
| 12 | Wed | Vicariate Meeting, Vellore |
| 13 | Thu | Vicariate Meeting, Polur |
| 14 M | Fri | Vicariate Meeting, Tiruvannamalai |
| E | | School Day, St. Antony Mat. School, Kattukovil |
| 15 | Sat | School Day, Cheiyur |
| 17 | Mon | Feast Mass, Acharapakkam |
| 18 M | Tue | Vicariate Meeting, Chetpet |
| E | | Confirmation, Narasingapuram |

| | | |
|---|---|---|
| 21 | Fri | Vicariate Meeting, Tirupattur |
| 22-23 | | PMO – Meeting, Bangalore |
| 25 | Tue | Priestly Ordination Day<br>- Bishop Ambrose Pitchaimuthu |
| 26 | Wed | Vicariate Meeting, Vettavalam |
| 27 | Thu | School Day, Boodamangalam |
| 28 | Fri | Vicariate Meeting, Arakkonam |
| 29 | Sat | Lenten Pilgrimage, Kattukovil |
| 30 | Sun | Blessing of the Stations of the Cross & Holy Mass, Udayendiram |

## தவக்கால மேய்ப்புப்பணி மடல் - 2025

(இம்மடல் தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு-16 மார்ச் 2025- அன்று நம் மறைமாவட்டத்தின் அனைத்து பங்கு ஆலயங்களிலும், துறவற இல்லங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்)

## எதிர்நோக்கில் இணைந்து பயணிப்போம்!

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே,

கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துகள்! இத்தவக்காலச் சுற்றுமடல் வழியாக உங்களோடு உரையாடுவதில் மகிழ்கிறேன்.

அகில உலகத் திருஅவையில் நடந்து முடிந்துள்ள கூட்டியக்கத்துக்கான மாமன்றம் 2021-2024 மற்றும் இப்போது நாம் கொண்டாடிக்கொண்டிருக்கும் யூபிலி 2025 பின்புலத்தில் இந்த ஆண்டுக்கான தவக்காலச் செய்தியை நம் **திருத்தந்தை பிரான்சிஸ்**

அவர்கள் **'எதிர்நோக்கில் இணைந்து பயணிப்போம்'** என்னும் தலைப்பில் வழங்கியுள்ளார். திருத்தந்தையின் தவக்காலச் செய்தியை மையமாகக் கொண்டு இந்த மேய்ப்புப் பணி மடலை வரைகிறேன்.

'திருப்பயணம்,' 'இணைந்திருத்தல்,' 'எதிர்நோக்கு' என்னும் மூன்று சொற்கள் இங்கே முதன்மை பெறுகின்றன. கூட்டியக்கத்துக்கான மாமன்றத்தின் இறுதி ஏடு முன்மொழிகிற கூட்டியக்கக் கூறுகள் – செவிமடுத்தல், ஆவியாரில் உரையாடுதல், தேர்ந்து தெளிதல், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, வேற்றுமைகளைக் கொண்டாடுதல், கூட்டு உருவாக்கம் – போன்றவற்றை நம் மறைமாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

யூபிலி 2025-க்கான கருத்தோவியத்தின் மையமாக இருப்பது சிலுவை. நான்கு திசைகளிலிருந்து வருகிற மக்கள் சிலுவையைப் பற்றிப் பிடிக்கிறார்கள். சிலுவை நங்கூரமாக மாறி திருஅவை என்னும் படகு, போர்கள் மற்றும் நோய்களால் அலைக்கழிக்கப்படுகிற கடலின் நடுவே உறுதியுடன் நிலைத்து நிற்கச் செய்கிறது. தவக்காலத்தின் மையமாக இருப்பதும் சிலுவையே.

'எதிர்நோக்கு' என்பது ஓர் இறையியல் மதிப்பீடு (மற்றவை, நம்பிக்கை, அன்பு) என மொழிகிற கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (எண்கள் 1817-1821), எதிர்நோக்கு என்றால் மகிழ்ந்திருத்தல், காத்திருத்தல், அறிவித்தல் என எடுத்துரைக்கிறது.

நம் கிறிஸ்தவ மரபில், **'நோன்பு, இறைவேண்டல், பிறரன்புச் செயல்கள் செய்தல்'** என்னும் மூன்று முதன்மையான செயல்பாடுகள் வழியாகத் தவக்காலத்தைக் கொண்டாடுகிறோம். இம்மூன்று செயல்பாடுகளுமே நம் உள்ளத்தில் எதிர்நோக்கை வளர்க்கின்றன.

**(அ) நோன்பு வழி எதிர்நோக்கு**

அனைத்து உயிர்களுக்கும் மிக அடிப்படையான உணர்வாக இருப்பது பசி. நோன்பு இருக்கும்போது நாம் பசியை விரும்பி ஏற்கிறோம். நம் உடலின் நொறுங்குநிலையை நாம் பசித்திருக்கும்போது உணர்கிறோம். நாம் இவ்வாறு விரும்பி ஏற்கும் பசி வழியாக, பாலைநிலத்தில் பசித்திருந்த இயேசுவின் அனுபவத்தில் பங்குபெறுவதோடு, அதே பாலைவனத்தில் அவர் பலுகிப் பெருகச் செய்த அப்பத்தால் மக்கள் நிறைவு பெற்றதுபோல, நாமும் நற்கருணை அப்பத்தால் நிறைவு பெறுகிறோம். நாம் பெறுகிற நிறைவை பசித்திருக்கிற மானிடர் அனைவரும் பெறுவர் என்பது நம் எதிர்நோக்காக இருக்கிறது.

**(ஆ) இறைவேண்டல் வழி எதிர்நோக்கு**

நமக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கிறது இறைவேண்டல். “அமைதியிலும் இறைவேண்டலிலும் நாம் கடவுளைச் சந்திக்கும்போது, நம் உள்ளத்தின் தூண்டுதலாகவும் நம் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலாகவும் நமக்கு எதிர்நோக்கு வழங்கப்படுகிறது” என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இறையாட்சிக்கான எதிர்நோக்கை வெளிப்படுத்துவதாக அமைகிறது இயேசு கற்றுத்தந்த இறைவேண்டல்.

**(இ) பிறரன்புச் செயல்கள் வழி எதிர்நோக்கு**

தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்தல், நம் நலன்களையும் ஆற்றல்களையும் வாழ்வாதாரங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல் போன்றவற்றின் வழியாக நாம் ஒருவர் மற்றவருடன் நம்மையே இணைத்துக்கொள்கிறோம். வறியவர், புலம்பெயர்ந்தோர், அடைக்கலம் நாடுவோர், ஓரங்கட்டப்பட்டோர் ஆகியோருடன் நாம் துணைநிற்பது இரக்கத்தின் அடிப்படையில் அல்ல. மாறாக, நீதியின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதும் நம் திருத்தந்தையின் அழைப்பாக இருக்கிறது. சாலையில் குற்றுயிராகக் கிடந்த நபரை மீண்டும் சமூகத்துடன் சேர்த்த நல்ல சமாரியன்போல (காண். லூக்

10, ‘அனைவரும் உடன்பிறந்தோர்’) பரிவுடன் செயலாற்றுவதற்கு அடிப்படையாக இருப்பது நம் வாழ்க்கைப் பயணத்தைச் சற்றே நிறுத்தி, நம் கண்முன் உள்ளவற்றை உற்றுக் கவனிப்பதே ஆகும்.

ஆக, நோன்பு, இறைவேண்டல், பிறரன்புச் செயல்கள் நம் வாழ்வில் எதிர்நோக்கு என்னும் ஒளியை நாம் அணையாமல் காத்துக்கொள்ளத் துணைநிற்கின்றன.

மேற்காணும் செயல்களையும், தவ உடைகள் அணிதல், சிலுவைப் பாதை செபித்தல், திருப்பயணங்கள் மேற்கொள்ளுதல் போன்ற பிற தவ முயற்சிகளையும் மேற்கொள்ளும் நாம், கடவுள் நமக்குச் செய்கிற செயல்கள் பற்றிய, அவர் நமக்குக் காட்டுகிற பரிவு பற்றியும் சிந்திக்க வேண்டும். இயேசுவின் இறப்பு நிகழ்வில் வெளிப்பட்ட கடவுளின் உச்சகட்ட இரக்கத்தை நாம் அனுபவிக்கிற காலமாகத் தவக்காலம் அமைய வேண்டும்.

எதிர்நோக்கில் நாம் இணைந்து பயணிப்போம் என அழைக்கிற திருத்தந்தை பிரான்சிஸ், விடுதலை வாழ்வு நோக்கி நாம் நகர வேண்டும் என அழைப்பு விடுக்கிறார். பாலைநிலத்தின் வழியாகவே கடவுள் இஸ்ரயேல் மக்களை விடுதலைக்குக் கடந்துபோகச் செய்தார். தவக்காலம் மனமாற்றத்தின் காலம், விடுதலையின் காலம். கடந்த ஞாயிறு நாம் சிந்தித்தது போல, இயேசுவும் பாலைநிலத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். சோதனைகள் நடுவிலும் தன் உள்மன விடுதலையைக் காத்துக்கொள்கிறார். உள்மன விடுதலையை நாம் பெற்றுக்கொள்ள நம்மை அழைக்கிறார். இன்றைய ஞாயிறு வழிபாட்டில் நாம் சிந்திக்கும் இயேசுவின் தோற்றமாற்றம் இணைந்து பயணிக்கும் நிகழ்வாக அமைகிறது.

கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா தருகிற மகிழ்ச்சிக்கு நம்மையே தயாரிக்கிற காலமே தவக்காலம். “துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். ஏனெனில், துன்பத்தால் மனஉறுதியும், மனஉறுதியால் தகைமையும், தகைமையால்

எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது" (காண். உரோ 5:3-5) என எழுதுகிறார் பவுல். நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ள கடவுளின் அன்பை அனுபவித்தவர்களாக, எதிர்நோக்கின் ஒளியில் திருப்பயணிகளாக, கூட்டியக்கம் நோக்கி நடைபோடுவோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

இரக்கத்தோடும் எதிர்நோக்கோடும் உங்கள் அன்பு ஆயர்,

+ மேதகு முனைவர் **அம்புரோஸ் பிச்சைமுத்து**
வேலூர் மறைமாவட்டம

## MESSAGE OF HIS HOLINESS POPE FRANCIS

### FOR LENT 2025

Let us journey together in hope

Dear brothers and sisters,

We begin our annual pilgrimage of Lent in faith and hope with the penitential rite of he imposition of ashes. The Church, our mother and teacher, invites us to open our hearts to God's grace, so that we can celebrate with great joy the paschal victory of Christ the Lord over sin and death, which led Saint Paul to exclaim: "Death has been swallowed up in victory. Where, O death, is your victory? Where, O death, is your sting?" (1 Cor. 15:54-55). Indeed, Jesus Christ, crucified and risen, is the heart of our faith and the pledge of our hope in the Father's great promise, already fulfilled in his beloved Son: life eternal (cf. Jn. 10:28; 17:3).

This Lent, as we share in the grace of the Jubilee Year, I would like to propose a few reflections on what it means to journey together in hope, and on the summons to conversion that God in his mercy addresses to all of us, as individuals and as a community.

First of all, to journey. The Jubilee motto, “Pilgrims of Hope”, evokes the lengthy journey of the people of Israel to the Promised Land, as recounted in the Book of Exodus. This arduous path from slavery to freedom was willed and guided by the Lord, who loves his people and remains ever faithful to them. It is hard to think of the biblical exodus without also thinking of those of our brothers and sisters who in our own day are fleeing situations of misery and violence in search of a better life for themselves and their loved ones. A first call to conversion thus comes from the realization that all of us are pilgrims in this life; each of us is invited to stop and ask how our lives reflect this fact. Am I really on a journey, or am I standing still, not moving, either immobilized by fear and hopelessness or reluctant to move out of my comfort zone? Am I seeking ways to leave behind the occasions of sin and situations that degrade my dignity? It would be a good Lenten exercise for us to compare our daily life with that of some migrant or foreigner, to learn how to sympathize with their experiences and in this way discover what God is asking of us so that we can better advance on our journey to the house of the Father. This would be a good “examination of conscience” for all of us wayfarers.

Second, to journey together. The Church is called to walk together, to be synodal. Christians are called to walk at the side of others and

never as lone travellers. The Holy Spirit impels us not to remain self-absorbed, but to leave ourselves behind and keep walking towards God and our brothers and sisters. Journeying together means consolidating the unity grounded in our common dignity as children of God (cf. Gal 3:26-28). It means walking side-by-side, without shoving or stepping on others, without envy or hypocrisy, without letting anyone be left behind or excluded. Let us all walk in the same direction, tending towards the same goal, attentive to one another in love and patience.

This Lent, God is asking us to examine whether in our lives, in our families, in the places where we work and spend our time, we are capable of walking together with others, listening to them, resisting the temptation to become self-absorbed and to think only of our own needs. Let us ask ourselves in the presence of the Lord whether, as bishops, priests, consecrated persons and laity in the service of the Kingdom of God, we cooperate with others. Whether we show ourselves welcoming, with concrete gestures, to those both near and far. Whether we make others feel a part of the community or keep them at a distance. This, then, is a second call to conversion: a summons to synodality.

Third, let us journey together in hope, for we have been given a promise. May the hope that does not disappoint (cf. Rom 5:5), the central message of the Jubilee, be the focus of our Lenten journey towards the victory of Easter. As Pope Benedict XVI taught us in the

Encyclical Spe Salvi , “the human being needs unconditional love. He needs the certainty which makes him say: ‘neither death, nor life, nor angels, nor principalities, nor things present, nor things to come, nor powers, nor height, nor depth, nor anything else in all creation, will be able to separate us from the love of God in Christ Jesus our Lord’ ( Rom 8:38-39)”. Christ, my hope, has risen! He lives and reigns in glory. Death has been transformed into triumph, and the faith and great hope of Christians rests in this: the resurrection of Christ!

This, then, is the third call to conversion: a call to hope, to trust in God and his great promise of eternal life. Let us ask ourselves: Am I convinced that the Lord forgives my sins? Or do I act as if I can save myself? Do I long for salvation and call upon God’s help to attain it? Do I concretely experience the hope that enables me to interpret the events of history and inspires in me a commitment to justice and fraternity, to care for our common home and in such a way that no one feels excluded?

Sisters and brothers, thanks to God’s love in Jesus Christ, we are sustained in the hope that does not disappoint (cf. Rom 5:5). Hope is the “sure and steadfast anchor of the soul”. It moves the Church to pray for “everyone to be saved” (1 Tim. 2:4) and to look forward to her being united with Christ, her bridegroom, in the glory of heaven. This was the prayer of Saint Teresa of Avila: “Hope, O my soul, hope. You know neither the day nor the hour. Watch carefully, for everything passes quickly, even though your impatience makes doubtful what is certain, and turns a very short time into a long one” (The Exclamations of the Soul to God, 15:3).

May the Virgin Mary, Mother of Hope, intercede for us and accompany us on our Lenten journey.'

Rome, Saint John Lateran, 6 February 2025
Memorial of St Paul Miki and Companions, martyrs.
**POPE FRANCIS**

## கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம்

**பவித்திரம் பங்குப் பேரவை உருவாக்கம் :**
26.01.2025 ஞாயிற்றுக்கிழமை காலை புனித சகாய அன்னை பங்கில் அன்பிய ஒருங்கிணைப்பாளர்கள மற்றும் கொத்து நாட்டாண்மையர்களுக்கு மேய்ப்புப்பணி மைய இயக்குநர் பங்குப் பேரவையின் நோக்கம், செயல்பாடுகள் பற்றியும் மேலும் பங்குத்தந்தையோடு இணைந்து திருஅவை எவ்வாறு கூட்டொருங்கியக்கத் திருஅவையாக பயணிப்பதைப்பற்றி விளக்கம் அளித்தார். அன்பிய ஒருங்கிணைப்பாளர்கள், கொத்து நாட்டாண்மையர்கள் இணைந்து திருப்பலிக்கு பிறகு மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி N.T.இருதயராஜ், பங்குத்தந்தை இருதயராஜ் மற்றும் அருட்சகோதரிகள், முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. பங்குப் பேரவை துணைத் தலைவர், செயலர், பொருளர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதன்பின் நற்கருணை வழிப்பாட்டில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புப்பணி மைய இயக்குநர் பங்குப் பேரவை துணைத் தலைவர், செயலர், பொருளர் ஆகியோருக்கு பணி பொறுப்பை ஒப்படைத்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். பின்னர் உறுப்பினர்களுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார். பங்குத்தந்தை அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**நரசிங்கபுரம் பங்கு பேரவை உருவாக்கம் :**
02.02.2025 ஞாயிற்றுக்கிழமை புனித சூசையப்பர் பங்கில் அனைத்து அன்பிய குழுக்களை ஒன்றுக்கூட்டி பங்குப் பேரவையின் நோக்கம், செயல்பாடுகள் பற்றி வேதியர் சாமுவேல் அவர்களால் விளக்கப்பட்டது. பின்னர் அன்பியங்களிலிருந்து பங்கு பேரவை நியமன உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற்றது. 08.02.2025 சனிக்கிழமை மாலை மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. N.T.இருதயராஜ் அவர்கள் அன்பிய நியமன உறுப்பினர்களுக்கு பங்குப்பேரவையின் செயல்பாடுகள் ஒருங்கிணைப்பு திருஅவையின் பணிகள் என்ன என்பதை விளக்கினார். பின்னர் தேர்தல் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கு 09.02.2025 ஞாயிறு திருப்பலியில் மறையுரைக்குப் பின் பங்குப் பேரவை துணைத் தலைவர், செயலர், இணைச் செயலர், பொருளர் ஆகியோருக்கு பங்குத்தந்தை அருட்பணி கிரகோரி மற்றும் இறைச் சமூகம் முன்னிலையிலும் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்தார். பங்குப் பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். பின்னர் உறுப்பினர்களுக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார். பங்குத்தந்தை அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**மறைக்கல்வி / நன்னெறிக் கல்வி ஆண்டுத் தேர்வு-2025 :**
6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை மறைக்கல்வி, நன்னெறிக் கல்வி ஆண்டுத் தேர்வு 28.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறும். முதல் 3 இடங்களைப் பெற்ற திருத்திய விடைதாள்களை மேய்ப்புப்பணி மையத்திற்கு மார்ச் 10-ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பரிசும், சான்றிதழும் மறைவட்ட அளவில் வழங்கப்படும்.

## திருமண தயாரிப்பு வகுப்புகள்

**01.03.2025 - மாதத்தின் முதல் சனிக்கிழமை**

இடம் - திருவண்ணாமலை உலக மாதா ஆலயம்

நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

**15.03.2025 - மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை**

இடம் - வேலூர் ஆயர் இல்லம்

நேரம் - காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

இறைப்பணியில் அன்புடன்

அருட்பணி **N.T.இருதயராஜ்**

இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம். வேலூர்

## PROCURATOR'S OFFICE

### Mission Sunday Collection - 2024

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Polur | 74885 |
| 2 | Haffieldspet | 15000 |
| 3 | Vettavalam | 75000 |
| 4 | Gudiyattam | 15000 |
| 5 | Parasur | 2000 |
| 6 | Devikapuram | 10000 |
| 7 | Eleyankanni | 85000 |
| | **Total** | **277685** |

Thanks for your generous contribution for Mission Sunday . Those who have not yet sent Mission Sunday Collection, kindly send it as early as possible.

| | |
|---|---|
| **Very Rev. Fr. A.Kulandesu** | **Mr. S.Justin** |
| Procurator | Accountant |

## VELLORE & THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

23-01.2025-ஆம் தேதி திருச்சி டாசோசில் "விவசாய மேம்பாட்டிற்கான வளர்ச்சியும், திட்டமிடுதலும்" கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் VSSS & TVMSSS இயக்குநர் அருட்திரு. S. ஜேம்ஸ் MSW., அவர்கள் கலந்துக்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

**கோல்பிங் குழு செயல்பாடுகள்**

13-02.2025-ஆம் தேதி திருவண்ணாமலை குழு லோன் தவணை மற்றும் ஆண்டு சந்தா வசூலிகக்க கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் சென்றார்.

18-02.2025-ஆம் தேதி புதுப்பாளையம் குழு லோன் தவணை மற்றும் ஆண்டு சந்தா வசூலிகக்க கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் சென்றார்.

20-02.2025-ஆம் தேதி இந்திரவனம் குழு லோன் தவணை மற்றும் ஆண்டு சந்தா வசூலிகக்க கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் சென்றார்.

25-02.2025-ஆம் தேதி சோகனூரில் புதிய குழு உருவாக்க ஒருங்கிணைப்பாளர் சென்றார்.

27-02.2025-ஆம் தேதி சிருங்கட்டூர் ஆண்டு சந்தா வசூலக்க கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் சென்றார்.

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்,
திட்ட மேலாளர்கள்
திரு. **K.** ஏசுகுமார்,
கோல்பிங் ஒருங்கிணைப்பாளர்
**VSSS & TVMSSS**

பேரருட்திரு. **S.ஜேம்ஸ், MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## இளைஞர் பணிக்குழு

**தலைமைத்துவ பயிற்சி - பெரிய கொழப்பலூர் பங்கு**

மறைமாவட்ட இளைஞர் பணிக்குழுவில் செயல்படும் நிர்வாக மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கான தலைமைத்துவ மூன்றாம் கட்ட பயிற்சியானது 23.02.2025 ஞாயிறு அன்று, பெரிய கொழப்பலூர் பங்கில் நடைபெற்றது. காலை 7.30 மணி திருப்பலியில் கலந்து கொண்ட இளைஞர்கள், தொடர்ந்து 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை தலைமைத்துவ பயிற்சியில் சிறப்பாக ஈடுபட்டனர். இப்பயிற்சியைக் கொடுத்த அருட்தந்தை பால் வேளாங்கண்ணி, அருட்தந்தை. லாசர் வேளாங்கண்ணி மற்றும் அருட்தந்தை. ஜெயக்குமார் அவர்களுக்கு பணிக்குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதனை ஏற்பாடு செய்து கொடுத்த அப்பங்கின் பங்குத்தந்தை அருட்தந்தை. பால் வேளாங்கண்ணிக்கு சிறப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**இளைஞர் இயக்கம் அமைப்புமுறை பயிற்சி - போளூர் பங்கு**

தூய திருஇருதய ஆலய பங்கின் பங்குத்தந்தை. பிண்டோ, SDB அவர்களின் சிறப்பு முயற்சியால் இளைஞர் இயக்கம் மீண்டும் சிறப்பாகச் செயல்பட தொடங்கியுள்ளது. ஏறக்குறைய 60 இளைஞர்கள் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஒன்று கூடி

கருத்தரங்கு, சிறப்பு திருப்பலி, செயல்பாடு திட்டகூட்டம் இவற்றில் கலந்து கொள்கின்றனர். 23.02.2025 அன்று மாலை இளைஞர் பணிக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை. ஜெயசீலன் அவர்களின் தலைமையில் திருப்பலியும், தொடர்ந்து இளைஞர் இயக்கத்தின் விதிமுறைகளும், கட்டமைப்பு முறையும், இளைஞர்களுடைய ஒன்றுப்பாட்டைப் பற்றியும் விளக்க உரை கொடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் 40 இளைஞர்களும், இளம்பெண்களும் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்து கொடுத்த அருட்தந்தை. பிண்டோ, SDB அவர்களுக்கு சிறப்பு நன்றி.

**மறைமாவட்ட இளைஞர்களுக்கான தவக்கால சிறப்பு தியானம்: பாகாயம் பங்கு**

ஒவ்வொரு ஆண்டும் இளைஞர்களின் ஆன்மீக வாழ்வைப் பற்றி சிந்திப்பதற்காக மறைமாவட்ட அளவில் சிறப்பு தியானம் தவக்காலத்தில் நடைபெறுவது உண்டு. இவ்வாண்டு பாகாயம் பங்கில் வருகின்ற ஏப்ரல் மாதம், 5ஆம் தேதி, சனிக்கிழமை திருச்சி மறைமாவட்ட அருட்தந்தை. ஆல்பர்ட் அவர்களால் நடைபெற உள்ளது. எனவே ஒவ்வொரு பங்கில் இருந்தும் குறைந்தது ஐந்து இளைஞர்களை அனுப்பி இந்த தியானத்தில் கலந்து கொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அன்று மாலை நம் மறைமாவட்ட ஆயர் தலைமையில் சிறப்பு திருப்பலியும் நடைபெறும். இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ள பாகாயம் பங்குத்தந்தை வின்சென்ட் அவர்களுக்கு சிறப்பு நன்றிகள்.

அருட்தந்தை. **அ.ஜெயசீலன்**
இயக்குநர்

# கோடெப் தொழிற்பயிற்சி நிலையம்,

சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம்.

## Industrial Trade Fair - 2025

**06-02-2025**

"**உன்கையில் திறமை இனிஇல்லை வறுமை**" என்ற விருது வாக்கோடு இயங்கும் **கோடெப் தொழிற் பயிற்சி நிலையத்தில்** ஓர் புதிய முயற்சியாக பள்ளி மாணவர்களுக்கு, தொழிற்துறை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் **தொழிற்துறை கண்காட்சி-2025,** நடைபெற்றது. இதில் **மோட்டார் மெக்கானிக், பிட்டர், வெல்டர், சோலார் டெக்னீசியன்** (எலக்டீரிகல்) மற்றும் **எலக்ட்ரீஷியன்** போன்ற தொழிற் பிரிவுகள் பற்றிய பல்வேறு வகையான, வித்தியாசமான செய்முறை வகைகளும், கருவிகளும், பொருட்களும், மோட்டார்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதனைக் காண சேத்துப்பட்டு தாலுக்காவைச்சார்ந்து பல உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஏறக்குறைய 280 பேர் கண்டு பயன் பெற்றனர். இதனை திருவண்ணாமலை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உயர்திரு. சி.சுவாமி முத்தழகன், அவர்கள் தலைமை தாங்கி கண்காட்சியை தொடங்கி வைத்தார். உயர்திரு.வா.தியாகராஜன் மாவட்ட திறன் பயிற்சியின் உதவி இயக்குநர் அவர்கள், தலைமை தாங்கினார். இந்த தொழிற்துறை கண்காட்சி காலை 10.00 மணி முதல் மதியம் 3. மணிவரை நடைபெற்றது. ஓர் வரலாற்று பதிவானது.

### New IT Lab Cum Domine

**10-02-2025** **கோடெப் தொழிற் பயிற்சி நிலையத்தில்**, ஆர்வமுள்ள கிராமபுற மாணவர்கள் பயன் பெறும் வகையில் **புதியதாக கணினி பயிற்சி கூடம்** மேதகு. ஆயர். **அம்புரோஸ் பிச்சைமுத்து** அவர்களால் மந்திரித்து பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டது.

### New Solar Technician (Electrical) Trade

**கோடெப் தொழிற் பயிற்சி நிலையத்தில்**, புதியதாக இக்கால சூழ்நிலைக்கு ஏற்ற **(New age)** சூரிய ஒளி நிபுனர் (மின்) என்ற தொழிற்த்துறை பிரிவு தொடக்கப்பட்டது. இதனை எம் மறைமாவட்ட ஆயர் மேதகு. **அம்புரோஸ் பிச்சைமுத்து** அவர்கள், ஆசீர்வதித்தார். சேத்துப்பட்டு **புனித தோமையர் மருத்துவமனை** மற்றும் **தொழுநோய் நிலையத்தின்** தலைமை நிர்வாகி அலுவலர் சகோ. **மரிய ரத்தினம்** அவர்கள், திறந்து வைத்தார். இது ஓர் புதிய வரலாற்றுப் பதிவு.

### New Industrial Workshop

**கோடெப் தொழிற் பயிற்சி நிலையத்தில்**, மோட்டார் மெக்கானிக் **(MMV)** தொழிற்ப் பிரிவுக்கு புதியதாக தொழிற்துறை பயிற்சிக் கூடம் கட்டப்பட்டு மேதகு. ஆயர் **அம்புரோஸ் பிச்சைமுத்து** அவர்களால், ஆசீர்வதிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு அளிக்கப்பட்டது.

அருட்பணி. **ச.ரிச்சர்ட் பெரைரா,**
இயக்குநர், கோடெப், சேத்பட்.

## மரியாயின் சேனை

26.01.25 ஞாயிற்றுக்கிழமை மரியாயின் சேனை, வேலூர் கொமித்சியத்தின் நேரடி பிரசீடியமான பள்ளிகொண்டா பங்கு பார்வையிடப்பபட்டது. பங்குத்தந்தை அற்புதராஜ் தலைமையில் இயங்கி வந்த பிரசீடியத்தின் பொறப்பாளர்களின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில் கொமித்சிய அலுவலர்கள் இருவர் (சகோ. ரத்னாமேரி, மேரி ஜெசிந்தா) சென்று கூட்டம் நடத்தி பொறுப்பாளர்கள் நால்வர் புதிதாக தேர்வு செய்யப்பட்டு பொறுப்புகள் கடமைகளை விளக்கிக் கூறியபின், தங்கள் பிரமாணிக்கத்தை தூய ஆவியாருக்கு அளித்தனர்.

மேலும் இந்தப் பிரசீடியத்தில் ஆண்கள் இருவர் உறுப்பினராக இருப்பதால் அவர்களில் ஒருவருக்கு செயலராகப் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அருட்தந்தை அற்புதராஜ் அவர்கள் ஆசி வழங்கி நல்ல பணி செய்ய வாழ்தினார். மேலும் அவர்களின் சேவை அறிக்கை, வருகைப் பதிவு ஆய்வு செய்யப்பட்டது. இரகசியப் பை வசூல், ஒரு வருடத்திற்கான வரவு செலவு கணக்குகள் சகோ. ரத்தினாமேரி அவர்களால் தணிக்கை செய்யப்பட்டது. இறுதி ஜெபத்துடன் குருவின் ஆசீருடன் கூட்டம் காலை 11.30 மணிக்கு நிறைவுப் பெற்றது.

26.01.25 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காட்பாடி கியூரியா தூய நற்கருணை நாதர் ஆலயம் பேரருட்தந்தை மார்டின் அடிகளார் தலைமையில் நடைபெறும் மரியாயின் சேனை கியூரியா சகோ. ரத்தினாமேரி, மேரி ஜெசிந்தா அவர்களால் பார்வையிடப்பட்டது (இது வருடாந்திர பார்வை)

அன்று 2.30 மணிக்கு கூட்டம் ஆரம்பமனது இதில் காட்பாடி, காந்திநகர், சேவூர், குடியாத்தம் ஆகிய பங்குகளில் இருந்து பிரசீடிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு தாங்கள் செய்த சேவையை படித்து சமர்பித்தனர். சிறந்த சேவைக்குப் பாராட்டு பெற்றனர். மேலும்

சரிவர இயங்காத பங்கு பிரசீடியங்களையும், கிளைப் பங்கு பிரசீடியங்களையும் கியூரியா பொறுப்பாளர்கள், உடனடியாக பார்வையிட்டு புதுப்பிக்க கொமித்சிய பொறுப்பாளர்கள் கேட்டுக் கொண்டனர். கியூரியாவின் (காட்பாடி) செயல்பாடுகள் முறைப்படி செயல்பட்டு வருவதையும், அறிக்கைகள் மற்றும் வரவு செலவு கணக்குகள் ஆய்வு செய்யப் பட்டதில் சேனையின் ஒழுங்கு முறைப்படி பெயல்பட்டு வருவதை குறித்து பாராட்டு தெரிவித்து தொடர்ந்து கடைப்பிடிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இறுதி ஜெபத்துடன் குருவின் ஆசீருடன் கூட்டம் மாலை 5.00 மணிக்கு இனிதே நிறைவுற்றது. மொத்தம் 25 சேனையர்கள் பங்கேற்றனர். வருகை தந்த அனைவருக்கும் தந்தையால் தேனீர், பிஸ்கட் வழங்கப்பட்டது.

2.2.25 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சேனையின் உயர் நிர்வாக சபை சென்னை செனாதூஸ் கூட்டத்தில் 3 மாத சேவை அறிக்கை வேலூர் நிர்வாக சபையான கொமித்சியம் சமர்ப்பித்தோம் இதில் முக்கிய சேவையான இரத்த தானம் செய்தது, 24 மணிநேர தொடர் ஜெபமாலை. உலக சமாதானம், போர் நிறுத்தம், சேனையாரின் ஆன்மீக எழுச்சிக்காக ஜெபிக்கப்பட்டதையும், சிறையில் இருக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் திருவிவிலியம் 10 வாங்கி கிறிஸ்து பிறப்பு விழாவின் போது சேனையார் பரிசாக வழங்கியதையும், சிறை சகோதரர் மகள் திருமணம் நடைபெற உதவி செய்ததையும், மேலும் வேலூர் கொமித்சியத்தின் கீழ் இயங்கும் கியூரியாக்கள் ஒவ்வொன்றும் வெகு தொலைவில் இருப்பதாலும் ஆன்ம இயக்குநர் பேரருட்தந்தை. ஜெயபிரகாசம் மற்றும் கொமித்சிய பொறுப்பாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதைக் குறித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது இதில் தொமித்சிய அலுவலர்கள் மற்றும் கியூரியாக்கள் காட்பாடி, ராணிப்பேட்டை, அரக்கோணம் மொத்தம் 6பேர் பார்வையாளராக அழைத்து சென்று அறிக்கை (கொமித்சியம்) சமர்ப்பித்ததை அறிய வாய்ப்பாக அமைந்தது. செனாதூஸ் பொறுப்பாளர்கள் வாழ்த்து பெற்றபின் இறுதி ஜெபத்துடன் கூட்டம் மாலை 5.30 மணிக்கு நிறைவுற்றது.

9.2.25 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மாதாந்திர மரியாயின் சேனை வேலூர் கொமித்சியம் கூட்டம் ஆரம்பமானது.

இதில் கியூரியா காட்பாடி, ராணிப்பேட்டையும் நேரடி பிரசீடியங்கள் கதீட்ரல் பெண்கள், ஓல்டுடவுன், பள்ளிகொண்டா, பாகாயம் ஆகிய பங்குகளின் பிரசீடிய பொறுப்பாளர்கள் பங்கேற்று தங்கள் அறிக்கைகளைச் சமர்பித்தனர்.

இதில் முக்கிய கருத்தாக சேனையார் அனைவரும் ஜெபித்து பின் சேவை செய்ய செல்லவும், பிரசீடியம் இயங்காத பங்கு, கிளைப்பங்குகளைப் பார்வையிட்டு புதுப்பிக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஜூபிலி ஆண்டின் திருப்பயணிகளான நாம் அனைவரும் அன்னை மரியாள் முலமாக இயேசுவை அறிவித்து வாழ்வாக்க உறுதி எடுத்துக் கொள்ளவும், மாதாவிற்கு 33 நாள் நவநாள் மேற்கொள்ளவும் ஒவ்வொரு பிரசீடியம் கியூரியாவையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மறையுரை : பேரருட்தந்தை ஜெயபிரகாசம் அடிகளார் தம் உரையில் சேனையார் இருவர் இருவராக சென்று தங்களுக்கு குறித்துத்தரப்பட்ட வீடுகளையோ, மருத்துவமனைகளையோ பார்வையிட்டு ஜெபிக்கும் போது மூன்றாவது நபராக நமதாண்டவர் இயேசுவின் பிரசன்னம் கண்டிப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து செயல்புரியவும் ஒவ்வொரு சேனையாரும் தங்கள் கடமைகளை நிறைவேற்றவும், தொடர்ந்து பங்குகளில் சேனை கூட்டம் நடத்தவும் கேட்டுக்கொண்டார். இறுதி ஜெபத்துடன் குருவின் ஆசீருடன் கூட்டம் மாலை 4.30 மணிக்கு நிறைவுற்றது.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகோ. ரத்னாமேரி**
கொமித்சிய தலைவி, வேலூர்

**பள்ளி மற்றும் விடுதி சேர்க்கை**
**மேரி இமாகுலேட் மேல்நிலைப்பள்ளி, திருப்பத்தூர்**

அன்பு பங்குதந்தையர்களே,

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துகள் !

திருப்பத்தூர் மேரி இமாகுலேட் மேல்நிலைப்பள்ளி விடுதியில் தங்கி படிக்க 6, 7, 8, மற்றும் 9-ஆம் வகுப்பிற்கான சேர்க்கை நடைபெற உள்ளதால் விரும்புகின்ற பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுடன், ஏப்ரல் 26 ஆம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு மேரி இமாகுலேட் இல்லத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**விடுதிகாப்பாளார்**
மேரி இமாகுலேட் இல்லம், திருப்பத்தூர்

அருட்தந்தை. **இரா. அந்தோணிசாமி**

| | | |
|---|---|---|
| தந்தை | : | திரு. ஐ.இராசு (எ) பெரியநாயகம் |
| தாய் | : | திருமதி தெரேசம்மாள் |
| பிறப்பு | : | 26-01-1952 |
| இடம் | : | தூய இருதய அன்னை பங்கு, சாத்துப்பட்டு பாண்டி - கடலூர் உயர் மறைமாவட்டம் |

**குருகுலப் பயிற்சி**

| | | |
|---|---|---|
| இளங்குரு மடம் | : | புனித ஆகனஸ், கடலூர் |
| மெய்யியல் | : | பேதுரு குருமடம், பெங்களூரு (1975 - 1977) |
| இறையியல் | : | தூய பவுல் குருத்துவ கல்லூரி, திருச்சி (1979-1982) |

1978-ம் ஆண்டு அருட்தந்தை லூயிஸ் அவர்கள் வேலூர் மறைமாவட்டத்திற்கு இறைப்பணி செய்ய பரிந்துரை செய்தார். களப் பயிற்சி, திருத்தொண்டர் பணி, போளூர் திருஇருதய ஆண்டவர் ஆலயம்

குருத்துவ அருட்பொழிவு : 13.05.1983, தூய இருதய அன்னை ஆலயம்

**குருத்துவ பணிகள் :**

| | |
|---|---|
| 1983-1984 | உதவி பங்குதந்தை, தூய கார்மேல் அன்னை பங்கு, கொரட்டாம்பட்டு மற்றும் மேலாளர் விவசாய பண்ணை நாரியந்தல் |
| 1984-1986 | உதவி பங்குதந்தை, தூய லூர்து அன்னை, சேத்துப்பட்டு |
| 1986-1987 | உதவி பங்குதந்தை, அற்புத காணிக்கை மாதா ஆலயம், ஆரணி |
| 1987-1993 | பங்குதந்தை, புனித பேதுரு, புனித பவுல் ஆலயம், ஜப்திகாரணி |
| 1993-2000 | பங்குதந்தை, மேல்புதுப்பாக்கம் |
| 2000-2007 | பங்குதந்தை, புனித தெரேசாள் ஆலயம், மதுராம்பட்டு |
| 2007-2014 | பங்குதந்தை, புனித தெரேசாள் ஆலயம், பள்ளிகொண்டா |
| 2014-2018 | பங்குதந்தை, புனித காணிக்கை அன்னை ஆலயம், ஆரணி |
| 10.06.2018 முதல் 07.02.2025 | பங்குதந்தை, புனித அந்தோணியார் ஆலயம், நல்லூர் |

**அருட்தந்தை இரா. அந்தோணிசாமி அவர்கள் ஆற்றிய பணிகள் :**

1) கொரட்டாம்பட்டு பங்கில் - கிளை பங்கான வேளாங்கண்ணி நகரில் வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தை ஏற்பாடு.
2) ஜப்திகாரணி பங்கில்
   - குடிநீருக்காக போர்வெல் ஏற்பாடு
   - விவசாயத்திற்காக கிணறுகள் ஆழப்படுத்துதல்
   - 7 பம்புசெட், மின் மோட்டார் ஏழைகளுக்காக வங்கியின் மூலம் பெற்றுதந்தது.
   - மக்களுக்கு அரசு மூலம் விவசாயம், வீட்டுமனை பட்டா பெற்று தந்தது.
   - சமுதாய கூடம் கட்டுதல்.
   - வறட்சி காலத்தில் ஏழை மக்களுக்கு உதவிகள்.
   - கோயிலுக்கு சுற்றி மதில் சுவர் அமைத்தல்.
   - கிளை பங்கான கீழ்புத்தூரில் குழந்தை யேசு சிற்றாலயம்.
   - பங்குதந்தை இல்லம்.
3) மேல்புதுப்பாக்கம் பங்கில்
   - கன்னியர் மடம் மூலம் மருத்துவ வசதிகள், தையற் பயிற்சி மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தியது.
   - கட்டிடம் 1 முதல் 5-ம் வகுப்பு பள்ளிக்கூட வகுப்பறைகள்.
   - குடிநீர் தொட்டி கட்டியது.
   - கிளை பங்குகளில் 3 சிற்றாலயங்கள்.
   - மேல்புதுப்பாக்கம் பங்கிலிருந்து ராந்தம் கொரட்டூர் புதிய பங்கை உருவாக்கியது.
4) மதுராம்பட்டு பங்கில்.
   - ஆலய சீரமைப்பு பணிகள், பெல் டவர், கெபி ஆகியவை கட்டியது.

- விவசாய சங்கம், பெண்கள சங்கம் ஏற்படுத்துதல்.
- CRS மூலமாக கிராமப்புற சாலைகள்
- சிறு விவசாய மேம்பாட்டு திட்டம்

5) ஆரணி பங்கில்

- கல்லறையின் சுற்றுச்சுவர் எழுப்புதல்

6) பள்ளிகொண்டா பங்கில்

- மத்திய அரசு நிதி உதவியுடன் பள்ளிக்கூடம் கட்டியது.
- குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.

7) நல்லூர் பங்கில்

- கல்லறை நுழைவு வாயில், கதவு அமைத்தல்.
- பள்ளிக்கூட கட்டிடத்திற்கு கீழ் தளம் அமைத்து வண்ணம் பூசுதல்.
- ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்டெடுத்தல்.

அவர் பணியாற்றிய பங்குகளில் மக்களோடு மக்களாக இணைந்து மக்களுடைய அடிப்படை தேவைகள் அனைத்தும் அறிந்து உதவி கரம் நீட்டினார். கொரோனா காலம், இயற்கை சற்றக் காலங்களில் வேலூர் சமூக சேவை சங்கத்தின் வழியாக நிவாரணப் பொருட்கள் பெற்று மக்களுக்கு வழங்கினார். வாழ்நாள் முழுவதும் எளிமையாகவும், 'சாமானிய மக்களின் சாமியார்' என்று சிறப்பாக மக்களால் அழைக்கப்பட்டார். மக்களின் இன்ப துன்பங்களில் உடனிருந்து தோளோடு தோள் கொடுத்து உதவி கரமும் ஆதரவும் அளித்தார். அனைத்து குருக்களோடு சுமூகமான உறவுடன், பணிசெய்த பங்குகளில் ஆன்மீக பணிகளுக்கு முக்கியத்துடன் பணியாற்றினார். எந்த நேரத்திலும் மக்கள் அவரை சந்திக்க அவரது அறை திறந்தே இருக்கும். இவ்வாறு 42 ஆண்டுகள் மிகச்சிறப்பாக பணியாற்றி தனது 73வது அகவையில் 07.02.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.30 மணி அளவில் இறைவனடி சேர்ந்தார். முடிவில்லா வாழவை உம்அடியாருக்கு அளித்தருளும் ஆய்டவரே.

## BIRTHDAY

**Dear Fathers, we wish you God's blessings and good health**

| | | |
|---|---|---|
| 1 | Fr. S.Jeyaseelan | 01-03-1959 |
| 2 | Fr. L.Ramesh | 07-03-1977 |
| 3 | Fr. S.James | 10-03-1974 |
| 4 | Fr. V. Sekar | 13-03-1989 |
| 5 | Fr. D .ArockiaRaj | 16-03-1983 |
| 6 | Fr I.Valanarasu | 23-03-1983 |
| 7 | Fr. J.Jayaprakasam | 24-03-1957 |
| 8 | Fr. L.Christu Raj | 24-03-1978 |
| 9 | Fr . A .Sudharson | 26-03-1984 |
| 10 | Fr A.Devasagayam | 27-03-1981 |
| 11 | Fr. Joseph M Selvaraj | 31-03-1954 |

## ORDINATION ANNIVERSARIES

Congratulations and Prayerful wishes

| | | |
|---|---|---|
| 1 | Fr. P.Alexander | 16-03-1997 |
| 2 | Most Rev. **Dr. Ambrose Pitchaimuthu** | 25-03- 1993 |

## NECROLOGY

**Let us remember our deseased Priests**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. A. Arulsamy | 09.03.2023 |
| 2 | Rev. Fr. Francis Schlooz SDB | 20.03.1998 |
| 3 | Most Rev. Dr. P. Soundararaju Sdb | 21.03.2020 |
| 4 | Rev. Fr. M. Arockiasamy | 22.03.1990 |
| 5 | Rev. Fr. Maria Dosan SDB | 23.03.2019 |

| | | |
|---|---|---|
| 6 | Rev. Fr. Angelo Codello SDB | 23.03.1990 |
| 7 | Rev. R. Maria Dasan | 23.03.2019 |
| 8 | Rev. Fr. K.O. Abraham | 25.03.2018 |
| 9 | Rev. Dr. A. Velanganni Vinothraj | 26.03.2021 |
| 10 | Rev. Fr. Y. I. Abraham | 29.03.1995 |

Eternal rest grant unto your servents, O Lord!

## HOLY FATHER'S INTENTION



For Families in Crisis Let us pray that broken families might discover the cure for their wounds through forgiveness, rediscovering each other's gift, even in their differences.

## LITURGICAL CALENDER

| | | |
|---|---|---|
| 02 | Sun | 8th Ordinary Sunday |
| 04 | Tue | St. Casimir |
| 05 | Wed | Ash Wednesday |
| 08 | Sat | St. John of God, Rel. |
| 09 | Sun | 1st Sunday of Lent |
| 16 | Sun | 2nd Sunday of Lent |
| 17 | Mon | St. Patric, Bp. |
| 18 | Tue | St. Cyril of Jerusalem, Bp., Dr. |
| 19 | Wed | St. Joseph, Husband of B.V.M., Sol. |
| 23 | Sun | 3rd Sunday of Lent |
| 25 | Tue | Annunciation of the Lord, Sol. |
| 30 | Mon | 4th Sunday of Lent |

## RIP

**Let us remember in our prayers for the repose of the souls**

- Rev. Fr. R. Antonysamy (73) Parish Priest of St. Antony Church, Nallur (07.02.2025).

- Rev. Fr. Francis Sebastian SDB, Former Vicar Forane and Parish Priest of Sacred Heart Church, Polur (15.02.2025).

# 32nd Priestly Ordination Anniversary



Dear Lordship,

Wish you God's blessings,
Joy and good health on your
32nd Ordination day (25.03.2025) and
a fruitful Episcopal Ministry

Priests, Religious & Faithful
Vellore Diocese

*Edited & Published by Fr. Chancellor, Vellore Diocese*